**நவம்பர் – 16**

# TNPSC துளிகள்

- பட்டாசு ஆலைகளில் பணி புரியும் போது விபத்தில் உயிரிழந்தப் பெற்றோர்களின் குழந்தைகளின் கல்விச் செலவு முழுவதையும் தமிழக அரசே ஏற்கும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.
- புகழ்பெற்ற தமிழ் அறிஞர், எழுத்தாளர் மற்றும் ஆராய்ச்சியாளர் இராஜ் கௌதமன் காலமானார்.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது, O.P. ஜிண்டால் உலகப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து, 'அரசியலமைப்பு அருங்காட்சியகத்திற்கு' என்று வருகை தரும் பார்வையாளர்களை நன்கு வழி நடத்துவதற்காக ஒரு எந்திர மனிதனை உருவாக்கியுள்ளது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்துடன் (இஸ்ரோ) இணைந்து 'திரவ மற்றும் வெப்ப அறிவியல்' ஆராய்ச்சிக்கான சிறப்பு மையத்தினை நிறுவியுள்ளது.
- முதன்முறையாக, சுமார் 1,000 நபர்களை உள்ளடக்கிய மத்தியத் தொழில்துறைப் பாதுகாப்புப் படையின் (CISF) அனைத்து மகளிர் படைப்பிரிவினை நிறுவுவதற்கான முடிவிற்கு உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.
- மின் உற்பத்தித் துறையின் முக்கியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதை ஒரு நோக்கமாகக் கொண்ட மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் மின்சார அமைச்சர்களின் மாநாட்டிற்கு மத்திய மின்துறை அமைச்சர் தலைமை தாங்கினார்.
- தெற்காசிய தொலைதொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் (SATRC-25) 25வது கூட்டம் ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
- பிரேசில் நாடானது, G20 நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டினை 2024 ஆம் ஆண்டு நவம்பர் 18 – 19 ஆம் தேதிகளில் ரியோ டி ஜெனிரோ நகரில் நடத்தவுள்ளது.
- பிரிட்டனைச் சேர்ந்த சமந்தா ஹார்வி, சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஒரு நாள் என்பது குறித்த 'Orbital' என்ற தனது புதினத்திற்காக 2024 ஆம் ஆண்டிற்கான புக்கர் பரிசினை வென்றுள்ளார்.
- கேரள ஆளுநருக்கான கூடுதல் செயலாளர் டாக்டர் தேவேந்திர குமார் தோதாவத் 'Maa-Mother' என்ற புத்தகத்தினை எழுதியுள்ளார்.
- டிஃபென்ஸ் ஸ்பேஸ் ஏஜென்சி என்ற நிறுவனமானது, முதன் முறையாக அந்தரிக்சா அபியாஸ்-2024 எனப்படும் 3 நாட்கள் அளவிலான விண்வெளி பாதுகாப்புப் பயிற்சியை புது டெல்லியில் நடத்தியது.
- பங்கஜ் அத்வானி, கத்தாரில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டு IBSF உலக பில்லியர்ட்ஸ் (மேசைக்கோற் பந்தாட்டம்) சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் தனது 28வது உலகப் பட்டத்தினை வென்றார்.

# தமிழ்நாடு செய்திகள்

## 'ஊட்டச்சத்தை உறுதி செய்' திட்டத்தின் இரண்டாம் கட்டம்

- தமிழக அரசானது, அரியலூரில் 'ஊட்டச்சத்தை உறுதி செய்' திட்டத்தின் இரண்டாம் கட்டத்தினைத் துவக்கியுள்ளது.
- ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் மற்றும் அவர்களின் தாய்மார்களுக்கான


ஊட்டச்சத்து வழங்கீட்டுத் திட்டமாகும் இது.

- பிறப்பு முதல் சுமார் ஆறு மாதங்கள் வயதான வரையிலான 76,700 குழந்தைகளின் தாய்மார்கள், ஊட்டச்சத்து குறைபாடு உள்ளவர்களாக இதில் அடையாளம் காணப் பட்டு உள்ளனர்.
- அவர்களுக்கு இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் மொத்தம் 22 கோடி ரூபாய் செலவில் பயன்கள் வழங்கப்படும்.
- 2022 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் முதல் கட்டம் ஆனது, ஊட்டச் சத்துக் குறைபாடுள்ள குழந்தைகளை அடையாளம் கண்டுள்ளது.
- அரசாங்கத்தின் இந்தத் திட்டத்திற்குப் பிறகு, அவர்களில் சுமார் 77.3% பேரின் ஊட்டச் சத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு, இயல்பு நிலைக்கு முன்னேறியுள்ளது.



# தேசியச் செய்திகள்

## மாநிலங்களுக்கு இடையேயான சபைக்கான புதிய நிலைக்குழு




- மத்திய அரசானது, மாநிலங்களுக்கு இடையேயான சபையின் (ISC) நிலைக் குழுவை மறுசீரமைத்து, உள்துறை அமைச்சரை அதன் தலைவராக நியமித்தது.
- புதிய குழுவில் மேலும் 12 உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர்.

- அவர்கள் மகாராஷ்டிரா, ஒடிசா மற்றும் ஆந்திரப் பிரதேசம் உள்ளிட்ட ஏழு மாநிலங்களின் மூத்த மத்திய அமைச்சர்கள் மற்றும் முதல்வர்களை உள்ளடக்கியது ஆகும்.
- இது மாநிலங்களுக்கு இடையேயான சபையினால் பரிசீலிக்கப்பட வேண்டிய பல விவகாரங்களில் தொடர்ச்சியான சில ஆலோசனைகளை வழங்குவதற்குப் பணிக்கப் பட்டுள்ளது.
- மத்திய-மாநில மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக ISC செயலாற்றுகிறது
- இக்குழுவில் அனைத்து மாநில முதல்வர்கள் மற்றும் ஒன்பது மத்திய அமைச்சர்கள் உறுப்பினர்களாகவும், சுமார் 13 மத்திய அமைச்சர்கள் நிரந்தர உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

# சர்வதேசச் செய்திகள்

## ஆரோ-3 எறிகணை இடைமறிப்பு அமைப்பு




- ஜெர்மன் நாட்டில் இஸ்ரேலின் அரோவ்-3 எறிகணை இடைமறிப்பு அமைப்பின் முதல் நிறுவுதல் 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.
- ஆரோ 3 அமைப்பு ஆனது, ஆரோ -2 மற்றும் ஆரோ -3 ஆகிய எறிகணை இடைமறிப்பு அமைப்புகளையும் உள்ளடக்கியது.
- இது மிக நீண்ட தூர வரம்பிலான எறிகணை அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்காக இஸ்ரேலுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான ஒரு கூட்டுறவின் மூலம் உருவாக்கப் பட்டது.
- ஆரோ-3 அமைப்பை சுமார் 3.5 பில்லியன் டாலர் மதிப்பிலான ஒப்பந்தத்தில் ஜெர்மனி நாட்டிற்கு விற்பதற்கு இஸ்ரேல் கடந்த ஆண்டு ஒப்புக் கொண்டது என்ற நிலையில் இது இன்று வரை பதிவாகாத அதன் மிகப்பெரிய பாதுகாப்பு துறை சார் விற்பனையாகும்.
- எறிகணைகள் பூமியின் வளிமண்டலத்தில் மீண்டும் நுழைவதற்கு முன்பு அவற்றைத் தாக்கும் சிறப்புத் திறனை ஆரோ -3 கொண்டுள்ளது.

## SDS நுழைவு இசைவுச் சீட்டு திட்டம் - கனடா


- இந்தியா, சீனா மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட சுமார் 14 நாடுகளைச் சேர்ந்த கல்லூரி மாணாக்கர்களுக்கான மாணாக்கர் நேரடி உட்சேர்க்கை (SDS) திட்டத்தினை கனடா அரசு ரத்து செய்துள்ளது.

- இருப்பினும், இது வழக்கமான நுழைவு இசைவுச் சீட்டு வழியாக அந்த அனுமதிகளைப் பெறுவதற்கு ஏராளமான வாய்ப்பை வழங்குகிறது.
- மாணாக்கர் நுழைவு இசைவுச் சீட்டு விண்ணப்பங்களை மிகவும் வெகு விரைவாகச் செயலாக்குவதற்கு SDS திட்டம் வழி வகுக்கிறது.
- இது 2018 ஆம் ஆண்டு மேல்நிலைக் கல்விக்குப் பிந்தைய நிலையில் நியமிக்கப்பட்டக் கல்வி நிறுவனங்களில் (DLI) சேர்க்கை தொடங்கப் பட்டது.




# பொருளாதாரச் செய்திகள்

## FPI மற்றும் FDI ஆகியவற்றின் மறுவகைப்பாடு





- இந்திய ரிசர்வ் வங்கியானது அந்நியத் தொகுப்பு முதலீட்டாளர்கள் தங்கள் பெரும் நிதி முதலீடுகளை அந்நிய நேரடி முதலீடாக (FDI) மாற்றுவதற்கான ஒரு கட்டமைப்பை இறுதி செய்துள்ளது.
- எந்தவொரு அந்நியத் தொகுப்பு முதலீட்டாளர்களின் (FPIs) முதலீடுகளும், ஓர் இந்திய

நிறுவனத்தில் அதன் 10% அளவிலான பங்கு வரம்பை மீறும் தருணத்தில் அது அந்நிய நேரடி முதலீடு (FDI) என மறுவகைப்படுத்தப்படும்.

- இது 2019 ஆம் ஆண்டு அந்நியச் செலாவணி மேலாண்மை (கடன் அல்லாத செயற் கருவிகள்) விதிகளின் கீழ் வழங்கப்படுகிறது.
- தற்போது, அந்நியத் தொகுப்பு முதலீட்டாளர்கள், அவர்களின் முதலீட்டாளர் குழுவுடன் (FPI) செய்யும் முதலீடு ஆனது, வர்த்தகத்திற்குள் ஈடுபடுத்தப் படுவதற்கு கிடைக்கப் பெறும் முழு பங்குகளின் அடிப்படையில் மொத்த செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் 10 சதவீதத்திற்கும் குறைவாக இருக்க வேண்டும்.
- கட்டமைப்பின்படி, சம்பந்தப்பட்ட அந்நியத் தொகுப்பு முதலீட்டாளர் அரசாங்கத்திடம் இருந்து தேவையான முக்கிய ஒப்புதல்களையும், சம்பந்தப்பட்ட இந்திய முதலீட்டு நிறுவனத்தின் ஒப்புதலையும் பெற வேண்டும்.
- FDI என்பது இந்தியாவிற்கு வெளியே வசிக்கும் ஒருவரால் மூலதனச் செயற்கருவிகள் மூலம் செய்யப்படும் முதலீடு ஆகும்.
- FPI என்பது பங்குகள் மற்றும் பத்திரங்கள் போன்ற நிதி சொத்துக்களில் மறைமுகமாக மேற்கொள்ளப்படும் முதலீடு ஆகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## டுர்ரிடோப்சிஸ் டோர்னி




- டுர்ரிடோப்சிஸ் டோர்னி "அழியாத ஜெல்லிமீன்" என்றும் அழைக்கப்படுகிறது.
- அவை தனது வயது முதிர்வுச் செயல்முறையை நன்கு மாற்றியமைத்து மரணத்தைத் தவிர்க்கும் ஒரு குறிப்பிடத் தக்கத் திறனைக் கொண்டுள்ளன.
- சுற்றுச்சூழல் சார்ந்த அழுத்தம் அல்லது உடல் சேதத்தை எதிர்கொள்ளும் போது, இந்த ஜெல்லிமீன் அதன் வாழ்க்கைச் சுழற்சியின் முந்தைய நிலைக்குத் திரும்பும்.
- இது அதன் முதிர்ந்தச் செல்களை மீண்டும் பாலிப் (தொடக்க) நிலைக்கு மாற்றுகிறது (இளமை வடிவம்).
- ஜெல்லி மீன்கள் அதன் வாழ்க்கைச் சுழற்சியை மீண்டும் தொடங்க வழிவகுக்கின்ற இந்த உருமாற்றச் செயல்முறை ஆனது "செல் வகை மாற்றம்" என்றும் அழைக்கப் படுகிறது.

- இந்த உயிரினம் ஆனது முதன்முதலில் 1883 ஆம் ஆண்டில் அறிவியல் ஆய்வாளர்களால் விவரிக்கப் பட்டது.
- முதலில் மத்தியத் தரைக் கடல் பகுதிகளில் கண்டுபிடிக்கப் பட்ட இந்த ஒரு உயிரினம் ஆனது, உலகெங்கிலும் உள்ள பெருங்கடல்களில் காணப் படுகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## பருவநிலையின் நிலை குறித்த அறிக்கை 2024





- அஜர்பைஜானின் பாகு நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பருவ நிலை மாநாட்டின் (COP29) போது உலக வானிலை அமைப்பின் (WMO) 2024 ஆம் ஆண்டு பருவ நிலையின் நிலை குறித்த அறிக்கையானது வெளியிடப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டு ஆனது இதுவரையில் பதிவான ஒரு வெப்பமான ஆண்டாக இருக்கும் என்பதால் இந்த அறிக்கை ஒரு சிவப்பு (அபாய) எச்சரிக்கையை வெளியிட்டது.
- இந்த ஆண்டு ஜனவரி முதல் செப்டம்பர் மாதம் வரையில், உலக சராசரி வெப்பநிலை என்பது தொழில்துறை காலத்திற்கு முந்தைய காலத்தில் பதிவான ஒரு அளவை விட 1.54 டிகிரி அதிகமாக இருந்தது.
- இருப்பினும், பல தசாப்தங்களாக நீண்ட காலமாக நிகழ்ந்து வரும் வெப்ப மயமாதல் தடுப்பு நடவடிக்கைகள் ஆனது இந்த வெப்பநிலையினை 1.5 டிகிரிக்கு கீழே கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- WMO அறிக்கையானது, 2014-2023 காலக் கட்டம் வரையில், உலகளாவியச் சராசரி கடல் மட்டம் ஆண்டிற்கு 4.77 மில்லி மீட்டர் உயர்ந்துள்ளதாக கூறுகிறது.
- 1993 மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்டக் காலத்தில் இருந்த விகிதத்தை விட இது இரண்டு மடங்கு அதிகமாக இருந்தது.
- ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் சுமார் 93% நாட்களில் இந்தியா தீவிர வானிலை நிகழ்வுகளை எதிர் கொண்டது.
- பஞ்சாப் மற்றும் ஹரியானா ஆகியவை 34 நாட்களில் தீவிர வானிலை நிகழ்வுகளை எதிர் கொண்டதால், அவை மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட மாநிலங்களாகும்.
- அவற்றைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் ஆகியவை முறையே

27 மற்றும் 26 நாட்களில் தீவிர வானிலை நிகழ்வுகளை எதிர் கொண்டன.

- 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் நிலவரப்படி 55% நாடுகளில் மட்டுமே பல் இடர் முன்னெச்சரிக்கை அமைப்பு (MHEWS) உள்ளது.

## அகத்தியமலை மூங்கில் வால் ஊசித் தட்டான்

- திருவனந்தபுரம் மாவட்டத்தில் உள்ள மஞ்சாதிநின்னாவிளையில் புதிய வகை ஊசித் தட்டான் இனத்தினை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இது அகத்தியமலை மூங்கில் வால் (மலையாளத்தில் அகத்திய மலை முலவலன்) எனப் பெயரிடப் பட்டுள்ளது.
- இந்த ஊசித்தட்டான் இனமானது மூங்கில் வால் ஊசித்தட்டான் குழுவைச் சேர்ந்த ஓர் அரிய இனமாகும்.
- இந்த இனத்தில் உள்ள மற்றொரு ஒரே இனம் மலபார் மூங்கில் வால் ஊசித்தட்டான் (மெலனோனுரா பிலினேட்டா) ஆகும் என்பதோடு இது மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடர்களின் கூர்க்-வயநாடு நிலப்பரப்பில் காணப்படுகிறது.




# மாநிலச் செய்திகள்

## மோரன் மற்றும் மோட்டாக் சமூகங்கள்



- மோரன் மற்றும் மோட்டாக் சமூகத்தைச் சேர்ந்த மாணாக்கர், அசாமில் தங்களுக்குப் பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் (ST) அந்தஸ்து வழங்குவதில் பத்தாண்டு காலமாக நிலவி வரும் தாமதத்தினை எதிர்த்து போராட்டம் மேற்கொண்டுள்ளனர்.
- தற்போது இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC) என வகைப்படுத்தப்பட்டுள்ள தாய் அஹோம்கள், கோச் ராஜ்போங்ஷிகள், சூடியாக்கள் மற்றும் ஆதிவாசிகள் ஆகிய பிரிவினரும் பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் அந்தஸ்துக்கான கோரிக்கையினை


எழுப்பியுள்ளனர்.

- மோரான் என்பது அசாம் மற்றும் அருணாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்த பழங்குடியினக் குழுவாகும்.
- அசாம் மாநிலத்தில் உள்ள ஒரு முக்கிய சமூகமான தாய் அஹோம்ஸ் ஆனது அஹோம் பேரரசுடன் வரலாற்று உறவுகளைக் கொண்டுள்ளது.
- கோச் ராஜ்போங்ஷிஸ் மக்கள் அசாம் மற்றும் வங்காளத்தைச் சேர்ந்தவர்கள்.
- ஆதிவாசிகள் பெரும்பாலும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களாகப் பணியாற்றும் பழங்குடியினர் ஆவர்.

# முக்கிய தினங்கள்

## உலக நீரிழிவு நோய் தினம் - நவம்பர் 14

- இந்த நோயைப் பற்றிய பெரு விழிப்புணர்வை ஏற்படுத்துவது மற்றும் அதன் சரியான மேலாண்மை, அதற்கானச் சிகிச்சை மற்றும் தடுப்பு ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 1991 ஆம் ஆண்டு சர்வதேச நீரிழிவு நோய்க் கூட்டமைப்பு (IDF) மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றால் நிறுவப்பட்டது.
- நீரிழிவு நோய்க்கான ஒரு சிகிச்சையாக விளங்கும் இன்சுலினைக் கண்டறிய உதவிய அறிவியலாளர்களில் ஒருவரான டாக்டர் ஃபிரடெரிக் பான்டிங்கின் பிறந்தநாள் அன்று இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “Breaking Barriers, Bridging Gaps” என்பதாகும்.




# இதரச் செய்திகள்

## அரிதான இரத்தக் கோளாறுடன் தொடர்புடைய கோவிட்-19 தடுப்பூசி

- சில சமீபத்திய கண்டுபிடிப்புகள் ஆனது கொரோனாவாக் தடுப்பூசி மற்றும் இம்யூன் த்ரோம்போடிக் த்ரோம்போசைட்டோபெனிக் பர்புரா (TTP) ஆகியவற்றுக்கு இடையே ஒரு சாத்தியமான தொடர்பைக் குறிப்பிடுகின்றன.
- TTP என்பது அரிதான இரத்தக் கோளாறு ஆகும்.
- இது உடல் முழுவதும் சிறு இரத்தக் கட்டிகள் உருவாகும் பாதிப்பு நிலையாக வகைப் படுத்தப் படுகிறது.
- இந்த நிலையானது மிக குறைவான இரத்தத் தட்டுகள், இரத்த சோகை மற்றும் உறுப்பு

சேதத்திற்கு வழி வகுக்கிறது.

**Four Key Points: COVID-19 Vaccination and Immune Thrombocytopenia**

| | |
|---|---|
| *De Novo* ITP Risk | *De novo ITP* is not associated with mRNA-based COVID-19 vaccines (Pfizer-BioNTech and Moderna) in adults, but there is a possible slightly increased risk during the immediate post-vaccination period following adenoviral vector vaccines (Oxford-AstraZeneca and Janssen). |
| Acute ITP Exacerbation Risk | There is a 5-15% risk of provoking a clinically-relevant acute ITP exacerbation with COVID-19 vaccination in adult patients with pre-existing ITP. The risk is similar irrespective of the type of COVID-19 vaccine. |
| Treatment and Natural History of Post-COVID-19 Vaccine ITP | Both *de novo* ITP and acute ITP exacerbations occurring in adults following COVID-19 vaccination are usually readily treated with typical ITP therapies. Their natural history appears similar to ITP episodes not associated with COVID-19 vaccination. |
| Subsequent COVID-19 Vaccinations | The occurrence of an acute ITP exacerbation following COVID-19 vaccination does not preclude the adult patient from receiving further COVID-19 vaccinations, although the risk of acute exacerbation in these individuals appears to be modestly higher than the baseline 5-15% overall risk. |

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★